பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 29 செவ்வாய்க்கிழமை (13 07-1993) UTHAYAN --A Lively National Tamil Daily கதிர் 227

# சாகும் வரையில் உண்ணாவிரதம் யுத்த கைதிகள் நாளை ஆரம்பிப்பர்

## ‘குமாரி’ வந்து சேர்ந்தது தபால்கள் வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 13 உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் ''குமாரி'' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது.

யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரும் இந்தக் கப்பலில் யாழ். வந்து சேர்ந்தார்.

கப்பலில் தனியார்துறையினருக்கான பொருள்களே பெருமளவில் எடுத்துவரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

''குமாரி'' கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களின் விவரப்பட்டியல் நேற்று மாலை வரை யாழ் செயலகத்துக்குக் கிடைக்கவில்லை.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின.

இந்தக் கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரை இன்றியே உலர் உணவு பெறலாம்

### அவசர மாற்று ஏற்பாடு

குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான — ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய — இலவச உலர் உணவு முத்திரைகள் இங்கு வந்து சேர்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தால்—

அவசர நடவடிக்கையாக முத்திரைகள் இன்றியே அவர்களுக்கான உலர் உணவை விநியோகிக்க மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாற்று ஏற்பாட்டின் பிரகாரம் உலர் உணவு விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு சகல ப.நோ.கூ. சங்கங்களும் கேட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் மாற்று ஏற்பாடு குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

மாற்று ஏற்பாட்டின் பிரகாரம் மேற்படி இலவச உலர் உணவை பெற உரித்துடைய, இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவு முத்திரைகளின் உரித்துரிமை அடிக்கட்டைகளை ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் சமர்ப்பித்து, தங்களுக்குரிய உலர் உணவைப் பெற்றுக்கொள்ளலாம்.

நேற்றைய கூட்டத்தில் யாழ் செயலக அதிகாரிகளும், ப.நோ. கூ. சங்க தலைவர்கள், முகாமையாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-5)

## பலாலி, காரைநகரிலிருந்து ஷெல், பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 13 காரைநகர் கடற்பிராந்தியத்திலிருந்தும், படைமுகாமிலிருந்தும் நேற்று அதிகாலையிலும், பின்னர் காலையிலும் பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நான்கு ஷெல்கள் மூளாய் தெற்குப் பகுதியை அடுத்த வயல் பரப்பில் விழுந்து வெடித்தன. பீரங்கிச் சிதறல்கள் பொன்னாலை பெரியவர் சுடலைப் பகுதியிலும், பொன்னாலை குடியேற்ற வீட்டுக் கூரைகளின் மீதும் வந்து விழுந்தன.

இதேசமயம் —

நேற்று அதிகாலை பலாலி இராணுவ முகாமிலிருந்து வலிகாமம் வடக்கு, வடமராட்சிப் பகுதிகளை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தொண்டமானாறு மற்றும் வல்லைவெளிப் பகுதிகளை நோக்கி சில ஷெல்கள் ஏவப்பட்டன. (உ-15-17-28-155)

## உடுவில் கோப்பாயில் மோட்டார் ஊர்தி பதிவு

மோட்டார் ஊர்திப் பதிவின் மூன்றாம் கட்டம் ஆரம்பமாகியிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

கோப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஊர்தி உரிமையாளர்களை தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

ஸ்ரீலங்காவால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும் மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும்—

பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் குடும்ப அட்டைகளை எடுத்து வருவதோடு ஊர்திகளையும் பதிவுச் செயலகத்திற்குக் கொண்டு வந்து பரிசோதனைக்கு உட்படுத்துமாறும்— போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர். (உ)

## அரசு தொடர்ந்து பாராமுகம்

கொழும்பு, ஜூலை 13

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 31 பொலிஸாரும் சிப்பாய் ஒருவரும் மற்றும் அவர்களைப் பார்வையிடச்சென்று யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் அவர்களது உறவினர்கள் 38 பேரும் சாகும்வரையான தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நாளை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

எனினும் அவர்களை விடுவிக்க எதுவித முயற்சியும் எடுக்காமல் அரசும், பொறுப்பு வாய்ந்த அரசு அதிகாரிகளும் பாராமுகமாக உள்ளனர்.

பி. பி. ஸி. சிங்கள சேவையில் இதுபற்றிய தகவல் வெளியிடப்பட்டது.

யுத்தக் கைதிகளும், யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது உறவினர்களும் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக விடுத்த அறிவிப்பை அடுத்து தெற்கில் உள்ள அவர்களது உறவினர்கள் பதற்றமும் பீதியும் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு தினசரி சென்று யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர்களின் நிலை குறித்து விசாரித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்களில் பலர் வயது முதிர்ந்தவர்கள். அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ''மெரினால்'' இன்று வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 13 அத்தியாவசியப் பொருள்களுடன் ''மெரினால்'' கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

இக்கப்பலில் ஏற்றிவரப்படும் பொருள்களின் விவரம் நேற்று மாலை வரை தெரிய வரவில்லை. (உ-3)

## கைதிகள் விடுவிப்பு முயற்சி: இப்போதைக்கு கருத்து கூற பிரிகேடியர் வீரசேகர மறுப்பு

கொழும்பு, ஜூலை 13

யாழ்ப்பாணத்தில் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கான புதிய அழைப்போ, ஆலோசனையோ உங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதா என்று பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவிடம் கேட்டபோது—

அதுபற்றி தாம் இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்று அவர் பதில் அளித்தார்.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படி தெரிவித்தார்.

புலிகளின் காவலில் உள்ள யுத்தக்கைதிகள் பகல் வேளையில் தமது உறவினர்களுடன் சுபாஷ் ஹோட்டலில் தங்கியிருக்க அனுமதிக்கப் படுவதாகவும்—

இரவு வேளையில் அவர்கள் வேறொரு இடத்துக்குக் கூட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவிலிருந்து பாவனைக்கு உதவாத கவசவாகனங்கள் கொள்வனவு: பதிலளிக்க அமைச்சர் மறுப்பு

கொழும்பு, ஜூலை 13

பாவனைக்கு உதவாத போர்க் கருவிகளும், கவசவாகனங்களும் சீனாவில் இருந்து வாங்கப்பட்ட விவகாரம் தொடர்பாக சுதந்திரக் கட்சி எம்.பியான சி.வி. குணரத்தின நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்க நாடாளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க மறுத்துவிட்டார்.

தேசிய நலன்களை முன்னிட்டு, பாதுகாப்புக் காரணங்களுக்காக இக்கேள்விக்கு பதிலளிக்க முடியாது என்று அமைச்சர் தெரிவித்தார்.

சீனாவில் இருந்து போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்த வகையில் கமிஷன் பணம் பெறப்பட்டிருப்பதாக திரு. குணரத்தின குற்றஞ்சாட்டினார்.

கமிஷன் பணம் பெற்ற மோசடி வெளியாகிவிடும் என்பதால் கேள்விக்கு பதிலளிக்காது அமைச்சர் தட்டிக்கழிக்கிறார் என்றும் அவர் கூறினார்.

வடக்கு – கிழக்கு போரில் பயன்படுத்த முடியாதவை என்று கழித்துவிடப்பட்ட சீன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கொலை பட்டியலில் சந்திரிகாபெயரும் உள்ளதாம்!

### அச்சத்தினால் உயிலும் எழுதிவிட்டாராம்

கொழும்பு, ஜூலை 13

புலிகள் இயக்கத்தினர் கொழும்பில் கொலை செய்யவுள்ள அதிமுக்கிய அரசியல் [illegible] பெயரும் அடங்கி இருப்பதாக இராணுவ [illegible] எனக்கு அறிவித்திருக்கிறது.

மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இருந்தாலும் இந்தத் தகவல் தொடர்பாக நான் அலட்டிக் கொள்ளவில்லை. எனது உயிலை எழுதுவதில் மாத்திரம் துரிதமாகச் செயற்பட்டேன்; உண்மையில் புலிகள் இயக்கத்தினர் என்னைக் கொலை செய்ய நினைத்தால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை முறை ரத்து!

## மீண்டும் "சிட்" முறை அமுலுக்கு

கொழும்பு, ஜூலை 13

அரசாங்க வேலைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை முறையை ரத்து செய்வது என அரசு முடிவு செய்திருக்கிறது.

எம். பிக்கள் 'சிட்' (துண்டு) மூலம் சிபாரிசு செய்வோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் நடைமுறையை மீண்டும் அமுலுக்கு வரும்.

அரசு இவ்வாறு முடிவு செய்திருப்பதாக "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

தெற்கில் இளைஞர் கிளர்ச்சி உருவானதற்கான காரணங்களை ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் சிபாரிசை அடுத்து மேற்படி "சிட்" முறை அரசு ஒழித்தது என்பதும்—

வேலைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு போட்டிப் பரீட்சைகளை நடத்தும் நடைமுறையை அரசு 1989 இல் அமுலுக்குக் கொண்டு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இனிமேல் எம். பிக்களின் துண்டுகளின் அடிப்படையில் ஆட்களைச் சேர்ப்பதற்கான அதிகாரம் அமைச்சுச் செயலாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கோழிக்குஞ்சு விநியோகம்

முல்லைத்தீவு மாவட்டத்திலே முட்டை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் அதே வேளை வேலை வாய்ப்பினையும் வழங்கும் நோக்கத்துடன் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள புளியங்குளத்தைச் சேர்ந்த 20 படித்த பெண்களுக்கும்— நெடுங்கேணிப் பிரதேச சேனைப் பிலவு கிராமத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குட்பட்ட 20 பெண்களுக்கும் கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கான நடவடிக்கையை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

இவர்களுக்கு ஒரு மாத பராயமுடைய 25 கோழிக் குஞ்சுகள் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதோடு. முட்டையிடும்வரை கோழி உணவும் வழங்கப்படும்,

சில கோழிக் குஞ்சுகளை பராமரிப்பதில் உள்ள சிரமத்தையும், இறப்பு வீதத்தையும் தவிர்க்கும் முகமாகவே இவர்களுக்கு ஒரு மாதக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# வீட்டுத் தோட்டத்துக்கு இலங்கை வங்கி கடன்

அரியாலை, ஜூலை 13

யாழ்ப்பாண மாவட்ட வீட்டுத் தோட்டங்களில் சிறு தானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோருக்கு இலங்கை வங்கி கடன் வழங்கும்.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி மேற்படி தகவலை தெரிவித்தார்.

இக்கடனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கைவங்கி மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

விவசாயிகள் வங்கிக்கடன்களுக்கு விண்ணப்பிப்பதாகவும், ஆனால் புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு கடன்களை வழங்க வேண்டாம் என்று இலங்கை வங்கியின் கொழும்புத் தலைமையகம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்த அவர்—

விவசாயிகளுக்கு தொடர்ந்து வங்கிக் கடனை வழங்கதான் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார். (த-17)

### திருகோணமலையில்

# நிலக்கரியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையம்

திருகோணமலையில் நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆலையை நிர்மாணிக்கும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்கும் படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, எரிபொருள் எரிசக்தி அமைச்சரைப் பணித்திருக்கிறார்.

இந்த நிலக்கரி மின்சார ஆலை 300 மெகாவட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடியதாக திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படும் மின்சாரப் பற்றாக் குறையை தவிர்க்க நிலக்கரி மின்சார உற்பத்தி ஆலை நிர்மாணிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது என்று ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருக்கின்றார். (த-எ)

# மன்னாரில் பனை நடுகைப் போட்டி வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை-தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊக்குவிப்புடன், கடந்த ஆண்டு முழங்காவில் பிரதேசத்தில், மாவீரர் வாரத்தை முன்னிட்டு பூநகரி தெங்கு. பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தால் சங்க எல்லைப் பரப்புக்குட்பட்ட பகுதிகளை இணைத்து நடத்தப்பட்ட பனம் விதை நடுகை போட்டியில் —

சுமார் 100 விதைகளை நாட்டிய 15 பெரும், 200 விதைகளை நாட்டிய 22 பேரும், 500 விதைகளை நாட்டிய ஒருவரும் வெற்றியீட்டியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் கடந்த மே மாதம் முதலாம் திகதி முழங்காவில் பிரதேசத்தில் அமைந்துள்ள சோலை பாடசாலையில் நடைபெற்ற உற்பத்தி எழுச்சி வார வைபவத்தில் வழங்கப்பட்டன.

இதேவேளை—

பூநகரி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த முழங்காவில் பிரதேசத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கு பூநகரி ப.நோ.கூ. சங்கம் 21 ஆயிரத்து 900 பனம் விதைகளை கொள்வனவு செய்து வழங்கி நாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டமாக நட்ட விதைகளின் எண்ணிக்கையோடு தற்போது முளைத்து பராமரிப்பில் உள்ளதைப் பார்வையிட்டு இவ்வாண்டில் 5 பேருக்கு பரிசு வழங்கப்படவுள்ளன. இதே போன்று 94, 95ஆம் ஆண்டுகளில் பராமரிப்பு வளர்ச்சி போன்றவற்றைப் பார்வையிட்டு முதல் 3 பேருக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஊடாக பூநகரி தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் முழங்காவில் பிரதேசத்தில் 1992 ஆம் ஆண்டில் 28,300 பனம் விதைகளை நாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (த)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில்— 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில்— யாழ். புனித மரியாள் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.45 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மயிலங்காடு ஞானகலா எதிர் உரும்பிராய் காந்திஜி

★ குருநகர் தொடர்மாடி எதிர் யாழ். ஆறுகால்மடம் அறிவொளி

★ இளவாலை யங்ஹென்றியன் எதிர் தீவகம் பாரதி

o o o

சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகம் டாக்டர் எஸ். ராஜேந்திரம் நினைவாக சங்கானை பாரதி மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 2.00 மணி:- ஆனைக்கோட்டை யூனியன் அணி வி.க. எதிர் சென் மேரீஸ் வி.க அணி

★ 3.00 மணி:- ஜுபிற்றர் வி.க. "ஏ" அணி எதிர் மணிமேகன் வி.க, "ஏ" அணி

★ 4.30 மணி :- வட்டு சிவன் "ஏ" அணி எதிர் ப.நோ.கூ.ச,வி.க.,"ஸி" அணி

### இலங்கை நிர்வாக சேவை பரீட்சை;

# தமிழ் மொழியில் தோற்றிய ஒரு முஸ்லிம் மட்டுமே சித்தி

யாழ்ப்பாணம், ஜூலை 13

இலங்கை நிர்வாக சேவையில் ஆட்களைச் சேர்ப்பதற்கு 1989 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில் ஒருவர் மட்டுமே இம்முறை சித்தியடைந்துள்ளார். அவரும் ஒரு முஸ்லிம் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து தோற்றிய எவ். எம். மந்தசீர் என்பவரே சித்தியடைந்தவராவார்.

இதேவேளை - இப்பரீட்சைக்கு சிங்கள மொழி மூலம் தோற்றிய 62 பேர் சித்தியடைந்துள்ளனர் சித்தியடைந்தவர்களின் பெயர் விபரங்கள் மே மாதம் 28 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் [illegible] (த-168)

# குடிநீர்ப் பிரச்சினை: தமிழகத்தில் மறியற் போர்

சென்னை, ஜூலை 13

குடிநீர்ப்பிரச்சினையை தீர்க்க தமிழக அரசு தவறிவிட்டதாகக் குற்றம் சுமத்தி தமிழக காங்கிரஸ் நேற்று சென்னை நகரில் முழுக்கடையடைப்புப் போராட்டம் நடத்தியது.

இப்போராட்டத்தினால் சென்னை நகரின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படவில்லை என்று இந்திய வானொலி அறிவித்தது.

எனினும், இப்போராட்டம் முழு வெற்றியடைந்ததாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார்.

இப்போராட்டத்தின் ஒரு கட்டமாக சென்னையில் தமிழக காங்கிரஸினர் வீதி மறியல் போராட்டம் ஒன்றையும் நடத்தினர். அதில் கலந்து கொண்ட காங்கிரஸ் எம். பிக்கள் மற்றும் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர் என்று பொலீசார் கூறினார்கள்.

அ. தி. மு. கவினர் பொலீஸின் துணையோடு காங்கிரஸ் தொண்டர்களைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டிய வாழப்பாடி இராமமூர்த்தி, இது குறித்து பிரதமர் நரசிம்மராவ் உள்துறை அமைச்சர் சவான் ஆகியோரிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். (உ-எ)

## சாகும் வரையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தால் இரண்டு நாட்கள் கூட அவர்களது தேகம் தாக்குப் பிடிக்காது; அதனால் அவர்களில் உடல்நிலை விபரீத கட்டத்தை அடையும். — இப்படி தெற்கில் உள்ள அவர்களது உறவினர்கள் அச்சம் வெளியிட்டிருக்கின்றனர். [உ-6]


## பேய்ச்சியம்மனே!

நாயன்மார் கட்டிலுறை
நாயகியே வணங்கு-
கிறோம்

தாயவளே துயர்தீர்த்துச்
சேயெனைநீ காத்திடு-
வாய்!

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்.
(இன்று கொடியேற்றம்)
(26480)



யாழ்/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்
பழைய மாணவர் சங்கம்
புதிய நிர்வாக சபைத் தெரிவு
1993/94 — நியமனப்பத்திரங்கள் கோரல்
சகல உறுப்பினர்களுக்குமான

## அறிவித்தல்

மேற்படி தெரிவுக்கான நியமனப் பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

கருமம் முடிவு திகதி

1. நியமனப் பத்திரங்கள் விநியோகம்:
- 25-07-1993 நண்பகல் 12-00 மணி வரை.
2. நியமனப் பத்திரங்கள் ஏற்றல்:
- 30-07-1993 நண்பகல் 12-00 மணி வரை.
3. நியமனப் பத்திரங்கள் மீளப்பெறல்:
- 05-08-1993 நண்பகல் 12-00 மணி வரை.

தெரிவுக் கூட்டம் 15-08-1993 முற்பகல் 10-00 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபரிடமிருந்து விதிக்கப்பட்ட நியமனப் பத்திரப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் 15-7-93 ஆம் திகதியிலிருந்து பாடசாலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம் — தலைவர்
சேது விபுலானந்தா — கௌரவ செயலாளர்

கந்தரோடை,
சுன்னாகம்.
12-07-1993 (சி/5459)



## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

எமது அலுவலகத்தில் ஆங்கில நூல்களை தமிழில் மொழி பெயர்க்கக் கூடிய சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் தேவை.

நாளை (14-07-93) காலை 10-00 மணிக்கு சமுகம் தரவும்.

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
291, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி,
யாழ்ப்பாணம்.
[26485]



## எமது புதிய வெளியீடு

சரத்குமார், - ஹீரா, - கவுண்டமணி...

★ பேண்டு மாஸ்ரர் ★
(BAND MASTER)
(ஒறிஜினல்)

## வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.
(26486)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு அகதி முகாம்கள் 22ஆம் திகதியுடன் மூடப்படும்

கொழும்பு, ஜூலை 13

கொழும்பில் உள்ள அகதி முகாம்கள் மூன்றும் எதிர் வரும் 22ஆம் திகதியுடன் மூடப்படவுள்ளதாகக் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், முகத்துவாரம் இந்து காலாசார நிலையம் ஆகிய மூன்று முகாம்களுமே மூடப்படவுள்ளன. இது பற்றிய முன்னறிவித்தல் அந்த முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமூகசேவை திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று முகாம்களிலும் சுமார் 2 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை—

இந்த முகாம்கள் திடீரென மூடப்படுவதால் தாமும் தமது கல்விகற்கும் பிள்ளைகளும் பாதிக்கப்படுவது குறித்து அங்கு தங்கியுள்ளவர்கள் கவலை தெரிவித்துள்ளனர், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரை நேரில் சந்தித்து தமது கஷ்டங்கள் பற்றி அவர்கள் எடுத்துக் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து முகாம்களை மூடும் திட்டத்தை இவ் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ஒத்திவைக்குமாறு அவர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்தினாவை கேட்டுள்ளார். (த-5)

## இலங்கையில் சகலருக்கும் ‘எய்ட்ஸ்’ பரிசோதனை

கொழும்பு, ஜூலை, 13

இலங்கைப் பிரஜைகள் அனைவரையும், இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் அனைவரையும் எய்ட்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தைச் செயல்படுத்த அரசுக்கு 315 கோடி ரூபா செலவாகும் என்பதால் இத் தீர்மானம் முட்டாள்தனமானது; சாத்தியமற்றது என்று மருத்துவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளதாக ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்தது.

இந்தப் பிரேரணையில் கூறப்பட்ட விடயத்தை அமுல் நடத்த வேண்டுமாயின் அதற்காக தனியான சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் மூலம் கொண்டுவரவேண்டும் என்று சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-எ-6)

## ப.நோ.கூ. சங்கக் கடைகளில் பொருள்களின் புதிய விலை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். செயலகங்களில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அத்தியாவசியப் பொருள்களின் புதிய விலை சம்பந்தமான கூட்டத்தில் உணவுப் பொருள்களின் விலையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

புதிய விலை விவரம் வருமாறு:-

| பொருள்கள் (கிலோ ஒன்றுக்கு) | கொள்முதல் விலை ரூ சதம் | அதிஉச்ச விலை ரூ சதம் |
|---|---|---|
| வெள்ளைப் பச்சை அரிசி | 15-50 | 17-00 |
| சீனி | 26-50 | 28-00 |
| மா | 13-10 | 14-00 |
| பெருஞ்சீரகம் | 58-00 | 62-00 |
| சின்னச்சீரகம் | 175 00 | 180-00 |
| வெந்தயம் | 35-00 | 39-00 |
| மிளகு | 75-00 | 80-00 |
| தேயிலை- (100 கிராம்) | 7-20 | 7-50 |
| மைசூர்ப் பருப்பு | 53-00 | 55-00 |
| பயறு | 25-00 | 27-00 |
| மல்லி | 35-00 | 38-00 |
| ஹைலண்ட் பால்மா | 43-00 | 45-00 |

இந்த புதிய உச்ச விலையிலேயே ப.நோ. கூ. சங்கங்கள் மேற்படி பொருள்களை விற்பனை செய்யவேண்டும் என்று செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது. (ஒ.17)

## பாடசாலைகள் 28ஆம் திகதி மூடப்படுகின்றன

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இம்மாதம் 28ஆம் திகதி மூடப்படுகின்றன. (இ-152)

## மக்கள் வங்கிக் கிளை

யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கும் மாணவர்களுக்கும் வங்கிச் சேவையை வழங்குவதற்காக இலங்கை மக்கள் வங்கியின்கிளை ஒன்று நாளை புதன்கிழமை முதல் பல்கலைக்கழக வளவினுள் இயங்கவுள்ளது.

கைலாசபதி கலை அரங்கின் வடக்குப் பகுதியில் உள்ள தற்காலிகக் கட்டடத்தில் இக் கிளை இயங்கும்.

## ஆலய உற்சவங்கள்

நாயன்மார்கட்டு அருள்மிகு இராசராசேஸ்வரி பேய்ச்சிஅம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தேர். உற்சவம் 22ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்த உற்சவம் மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (க)

o o o

வண்ணை சிவன்கோவிலில் தேவி மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றமாகி 10 நாட்கள் நடைபெறும். தேர்த்திருவிழா 22ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா 23ஆம் திகதியும் இடம்பெறும்

o o o

கந்தரோடை 'வற்றாக்கைப் பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாத சுவாமி கோவில் அலங்கார உற்சவம் இவ்வருடம் முதன்முறையாக நாளை புதன்கிழமை தொடக்கம் 23 ஆம் திகதிவரை பத்து நாட்கள் நடைபெறவுள்ளது திருவிழாக் காலங்களில் விசேட சொற்பொழிவுகள் இடம் பெறும். (க-162)

o o o

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா 22ஆம்திகதி, தீர்த்தத்திருவிழா 23ஆம் திகதியும் நடைபெறும்.

உற்சவ நாட்களில் தினமும் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் தெய்வீகப் பேருரைகளை நிகழ்த்துவார். (க)

o o o

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும்.

ரதோற்சவம் 22ஆம் திகதியும். தீர்த்தோற்சவம் 23ஆம் திகதியும் நடைபெறும்.

மஹோற்சவ தினங்களில் தினந்தோறும் இரவு 8 மணி முதல் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் கம்ப இராமாயணத் தொடர் விரிவுரை நிகழும். (க)

o o o

அச்செழு - கொக்கிருந்தபதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறும். தேர்த்திருவிழா 22ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

## நல்லின விதைநெல்

உடுவில் பிரதேச விவசாயிகளுக்கு எதிர்வரும் காலபோகத்திற்கு விதைப்பதற்கு வேண்டிய நல்லின விதை நெல் உடுவில் கமநல சேவை நிலையத்தினரால் வழங்கப்பட உள்ளது.

இச்சேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகள் காலபோக விதை நெல்லை பெறுவதற்கு இருநூறு ரூபா முற்பணம் செலுத்தி உடுவில் கமநல சேவை நிலையத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த-152)

## தமிழ்இளைஞர்களால் மகஸீன்சிறை நிரம்பி வழிகிறது

கொழும்பு ஜூலை 13

கொழும்பில் அடிக்கடி இடம்பெறும் சுற்றிவளைப்புக்களினால் கைதாகும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களால் மகஸீன் சிறைச்சாலை நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயது வித்தியாசமின்றி தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர் என்றும்—

கொழும்பில் பல வருடங்கள் வசித்தவர்கள், கொழும்பில் தொழில் செய்பவர்கள் கூடக் கைதாகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

கைதாகும் தமிழர்கள் முதலில் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

மூன்று தினங்கள் வரை அவர்கள் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பர்.

இந்த மூன்று தினங்களுக்குள் அவர்களது உறவினர்கள் தரகர்கள் மூலம் பணம் கொடுத்து அவர்களை மீட்டு விடமுடியும். அப்படி மீட்கப்படாதோர் மகஸீன் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

போதிய உணவு இன்றியும் மாற்றிக் கட்ட உடையின்றியும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இவர்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைதிகளுக்கு காலைக் கடன்களைக் கழிப்பதற்கும் குடிப்பதற்கும் குறிக்கப்பட்ட அளவு தண்ணீரே வழங்கப்படுகிறது. குளிப்பதற்கு வாரம் ஒரு நாள் மட்டுமே தண்ணீர் வழங்கப்படுகிறது,

நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கைதிகளைப் பார்க்க அனுமதிக்கப்படுகிறது. கைதிகளும் உறவினர்களும் கதைப்பதை தமிழ்த் தெரிந்த இரகசியப் பொலிஸார் ஒற்றுக் கேட்கின்றனர்.

இப்படியான நிலையில் தான் மகஸீன் சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்கள் காலம் கழிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-175)

## நாரஹேன்பிட்டி தொடர் மாடியில் 30 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு நாரஹேன்பிட்டி அன்டர்ஸன் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தை கடந்த வியாழன் அதிகாலை சுற்றிவளைத்த பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து 30 தமிழ் இளைஞர், யுவதிகளை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

அதிகாலை நான்கு மணியளவில் இராணுவத்தினரும், பொலீஸாரும் அடங்கிய கூட்டுப் படையினர் தொடர்மாடியை சுற்றிவளைத்து தீவிர தேடுதல் நடத்தினர்

கைது செய்யப்பட்ட 30 பேரும், தேசிய புலனாய்வுப் பணியகத்தில் இருந்து அவர்கள் பற்றிய அறிக்கை கிடைத்ததும் விடுவிக்கப்படுவர் என பொலீஸ் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)


மானிப்பாய் - சுதுமலை

அருள்மிகு

ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ

மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

★ 10 — 07 — 1993 சனிக்கிழமை ஆரம்பமாகிவிட்டது.

★ 14 — 07 — 1993 புதன்கிழமை முடிவடையும்.

பிரதிஷ்டா பிரதம குரு
சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்
கிரியாகால முக்தாமணி - சுதுமலை

அடியார்கள் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

- பொதுமக்கள், சுதுமலை.

(6333)



★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஆனி மாதம் 26ஆம் நாள் (10-07-1993) சனிக்கிழமை காலை 10-39 முதல் 12-25 வரை வரும் கன்னி லக்கினமும் அமிர்த யோகமும் ★ கூடிய சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் ஜெயமனோஷரன் அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி தேவகி அவர்களுக்கும் |

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் திருமணம் இனிதே நிறைவேறியது என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

✶ தங்கள் நல்வரவை நாடும் ✶

கோ. சுந்தரம்பிள்ளையும் பாரியாரும், ''தேவகி'', 1082, பாலையூற்று, திருகோணமலை.

ச. சிவகுருநாதரும் பாரியாரும், ''சந்திரோதயம்'' சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

(6334)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கன்னாதிட்டி ஒழுங்கையில் ஒரு பரப்பும் இரண்டு குழியும் கொண்ட காணியில் வீடும், மின் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிங்கம் கூல் பார், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (26456)

ஒன்பது நாள் வளர்ந்த சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மல்லிகாபதி, மானிப்பாய். [26468]

### இலவச திருமண சேவை

35 வயது, பூரட்டாதி, செவ்வாயற்ற, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருணம் செய்து அழைக்கலாம், சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில்: விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (26474)

### றோணியோ பிரதி செய்தல்

தரமாக குறைந்த விலையில், குறித்த தவணையில் றோணியோ செய்து கொள்ளலாம். தரம் I பேப்பர் 1-00 ரூபா, தரம் II பேப்பர் 75 சதம். 100 பிரதிக்கு 20/-. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-5359)

### புலமைப் பரிசில்

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், S. K. சாமி — நெல்லியடி. ''பளிங்கு'' — சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (6325)

### வெளிவந்துவிட்டது!

உயர்தர மாணவர்களுக்குரிய இராஜகிருஷ்ணர் இரகுநாதன் எழுதிய ''வங்கிகளும் வங்கித் தொழிலும்'' மிக அண்மைக்கால மாற்றங்களையும் உள்ளடக்கிய கைநூல் வெளிவந்து விட்டது. விலை ரூபா 40/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், கொழும்பு. (6321)

---

அரியாலை

**புனித யூதாவிற்கு நன்றிகள் பல**

- ASMR

(26441)

---

## புதிய பிரிவுகள்

CHEMISTRY

திரு மகாதேவா

**A/L 94**

பிரிவு I

சனி, ஞாயிறு 11-00

பிரிவு-II

சனி, ஞாயிறு 1-00

10-07-1993 இல் ஆரம்பமாகிவிட்டன

**A/L 95**

சனி, ஞாயிறு 9-00

ஆரம்பம்:

01-08-1993

**BOND INSTITUTES**

யாழ்ப்பாணம்.

(26477)

---

# MEMORIAL SERVICE

## PETER R. SAMUEL

A service of Remembrance and thanks giving for the life of Peter R. Samuel, former Chairman and Managing Director of Samuel Sons and Co. Ltd., will be held on Wednesday 14th July 1993 at 7-00 a.m. at St. James church, Nallur Jaffna. All well wishers are cordially invited to attend this Service.

Manager,
Samuel Sons and Co. Ltd,. Jaffna.

(C-5457)

---

# நன்றி நவிலல்

## அமரர் தர்மலிங்கம் கந்தசாமி

எங்கள் குலவிளக்கு தர்மலிங்கம் கந்தசாமி அவர்கள் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி அரனடி சேர்ந்தது அறிந்து அருகோடி வந்து எங்களைத் தேற்றியும், ஆறுதலளித்தும், பல்வகையாலும் உதவியும் 1993-07-05 ஆம் திகதி அன்று இறுதிக் கிரியைகளிலும், இறுதியாத்திரையிலும் கலந்து சிறப்பித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தும், எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள்,
க. கனகராசா.
(மில்க்வைற்)

உரும்பராய் தெற்கு.
12-07-93.

(26479)

---

# நன்றி நவிலல்

01 - 07 - 1993 அன்று சிவபதமடைந்த

திருமதி

## சத்தியமூர்த்திக் குருக்கள் விஜயலக்ஷ்மி

அவர்களின் இறுதிக்கிரியைகளின் போதும் ஏனைய கிரியைகளின்போதும் கலந்து கொண்ட உற்றார், உறவினர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி ஆறுதல் அளித்த அன்பர்களுக்கும், தோள் கொடுத்து உதவிய நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இராம. சத்தியமூர்த்திக் குருக்கள்.
(ஜோதிட பூஷணம்)
பிள்ளைகள், மருமக்கள்.
மைத்துனர் ஸ்ரீதரக் குருக்கள், ஏனையோர்.

கந்தசாமி கோவிலடி,
இணுவில்.

(26471)

---

# 31 ஆம் நினைவு நாளும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 | 14 |
| — | — |
| 05 | 06 |
| — | — |
| 1940 | 1993 |

## அருளப்பு அகஸ்ரீன் ஞானமணி

ஊறணியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. அ. அகஸ்ரீன் ஞானமணியின் ஆன்ம இளைப்பாற்றிற்காக, நாளை (14-07-1993) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித அடைக்கல மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களைப் பணிவுடன் வேண்டி நிற்கிறோம்.

இவரது மரணச் சடங்கில் பங்குபற்றி, செபித்து, மலர்வளையம் வைத்து, பல உதவிகளை நல்கிய அனைவருக்கும் இவரது குடும்பத்தினராகிய நாம் நன்றி கூறுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

194, முதலாம் குறுக்குத் தெரு,
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக),
யாழ்ப்பாணம்.

(26481)

---

உ

வண் வடமேற்கு ஆனைக்கோட்டை

## ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயம்

# மஹோற்சவம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | 14 — 07 — 1993 புதன் காலை 10-00 மணி |
| சப்பறத் திருவிழா | 21 — 07 — 1993 புதன் இரவு 7-00 மணி |
| தேர்த் திருவிழா | 22 — 07 — 1993 வியாழன் பகல் 10-00 மணி |
| தீர்த்தத் திருவிழா | 23 — 07 — 1993 வெள்ளி பகல் 9-00 மணி |
| கொடியிறக்கம் | இரவு 6-30 மணி |
| பூங்காவனத் திருவிழா | 24 — 07 — 1993 சனி இரவு 7-00 மணி |

சமய விரிவுரை

கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள்

## ★ கம்ப இராமாயணம் ★

(சென்ற வருடத் தொடர்ச்சி)

14 07 - 1993 முதல் 23 - 07 - 1993 முடிய
தினசரி இரவு 8-00 மணி முதல்

திருப்பணிச் சபை.

பிரசுர அன்பளிப்பு:
அம்பாள் வர்த்தக நிலையம்,
பிடாரி கோவிலடி.

(6332)

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 23 | 13 |
| — | — |
| 06 | 07 |
| — | — |
| 1906 | 1987 |

வீரசேகர யாழ்ப்பாண முதலி வழித்தோன்றல்

அமரர்

## சிவகுருநாதர் தில்லையம்பலம்

''தோன்றிற் புகழொடு தோன்றுக என்னும்
ஆற்றமெங் வாங்கிற் கமைந்த உதாரணம்''


- குடும்பத்தினர்.

''தில்லைப்பதி'',
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

(26482)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 15 | 13 |
| — | — |
| 05 | 07 |
| — | — |
| 1947 | 1991 |

## அமரர் சு. ஆனந்தராஜா

(உரிமையாளர்: கண்ணியம் பேக்கரி - இருபாலை)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.

கோப்பாய்த் தோட்டம்,
இருபாலை,
கோப்பாய்.

(26335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஊசலாடும் வாழ்வியக்கம்

காங்கேசன்துறையில் இயங்கிய லங்கா சிமெந்து நிறுவனத் தொழிற்சாலையில் பணிபுரிந்து, இராணுவ நடவடிக்கைகளினால் தொழிலையும் வருமானத்தையும் இழந்ததினால், வாழ்க்கைக் கஷ்டங்களை அனுபவிக்க முடியாமல், ஆறு தொழிலாளர்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள்!

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பிய மகஜரில் அதிர்ச்சிக்குரிய இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தமிழ் மக்கள் மீது போரைத் திணித்த பின்னர், தொழில் இழந்தவர்கள் பல்லாயிரக்கணக்கானோர். தொழில்களை இழந்து வருமானம் இல்லாத நிலையில் ஒரு நேரக் கஞ்சிக்கும் வழியில்லாமல் குழந்தை குட்டிகளுடன் வாழ்க்கையின் ஓரத்துக்கே சென்றிருப்பவர்கள் பல்லாயிரவர்.

தொழில் என ஒன்றில்லாமல், வருமானம் இழந்திருக்கும் அதேவேளை, பொருளாதாரத் தடையால் உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகள் உச்சாணிக் கொப்புக்கு ஏறியதால் ஆயிரம் ஆயிரம் குடும்பங்கள் ஒட்டிய வயிற்றுடனும் ஒடிந்த மனதுடனும் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அதனால் பட்டினிச் சாவுகள், தற்கொலைகள் பலவும் வெளிச்சத்துக்கு வராமலே கஷ்டம் என்ற போர்வைக்குள் அடங்கியிருக்கலாம். லங்கா சிமெந்து தொழிலாளர்களின் தற்கொலைகள் இப்போது பகிரங்கமாகியுள்ளது போல இன்னும் பல பட்டினிச் சாவுகள், தொழிலுக்கு, வருவாய்க்கு, உணவுக்கு வழியில்லாததால் இடம்பெற்ற தற்கொலைகள் பற்றிய தகவல்கள் இனிமேல் பகிரங்கமாகும் என எதிர்பார்க்கலாம்

அரசாங்கம் வடக்கு-கிழக்கில் போரைப் பிரகடனம் செய்து, அதனைத் தமிழர்கள் மீது திணித்திருப்பதாலும், அதற்கு மேலதிகமாக பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை ஆகியவற்றை விதித்து அவர்களை முடக்கி முடமாக்கி விட்டிருப்பதாலும் மனித வாழ்வில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், தாக்கங்களையும் உணர்ந்து கொள்ளும் நிலையில் தெற்கில் எவரும் இல்லை.

இங்கே வந்து நேரில் நிலைமையைப் பார்த்தும் கேட்டும் சென்றவர்கள் ஊடாகவும் சரியான படம் சித்திரிக்கப்படவில்லை. வெளி உலகமும் ஈழத் தமிழர் நிலை குறித்து மிகச்சொற்பமே அறிந்துள்ளது. அவ்வாறு சொற்பமாக அறிந்தவற்றையும் சர்வதேசங்கள் நம்பாமல் செய்வதற்கான பொய்ப் பிரசாரத்தில் ஸ்ரீலங்கா அரசு கைதேர்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் சாதாரண மனித வாழ்வியக்கம் சகல அடித்தளங்களையும் இழந்து ஊசலாடுகிறது என்ற உண்மையை உலகத்துக்கு எடுத்துக் கூறவல்ல பிரசார தந்திரமும், மூலோபாயங்களும், உத்திகளும் தமிழர் தரப்பில் தேவை.

இல்லையேல் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும், அதனை ஒடுக்கும் நோக்குடன் அரசு எடுக்கும் நடவடிக்கைகளும் வெறும் ''உள்நாட்டுச் சண்டை'' என்ற பதத்துக்குள் அடக்கப்பட்டுவிடும். தமிழர்களின் விடுதலை வேட்கையினதும், அரசின் அடக்கு முறையினால் உண்டாகும் தாக்கங்களினதும் சரியான அளவீடுகளை உலகம் உய்த்துணராவிடில் பாதிப்பு தமிழருக்கே. இது குறித்து உன்னித்துச் சிந்திக்க வேண்டியது அத்தியாவசியம்.

## பிஸ்டல் மீட்பு

கொழும்பு, ஜூலை 13

பாரிய கொழும்புப் பிரதேசத்தில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் இருந்து திருடப்பட்ட பிஸ்டல் ஒன்று மோதரையில் கிம்புலாஎல பகுதியில் உள்ள சேரிக்குடிசை ஒன்றில் இருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

வெளிநாட்டுத் தயாரிப்பான இப் பிஸ்டல் குடிசையினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

(த-எ)

# உலக தமிழாராய்ச்சி மாநாடு

# மதுரையிலா? திருச்சியிலா?

## முடிவு எடுப்பதில் இழுபறி

சென்னை, ஜூலை 13

அடுத்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழ் நாட்டில் நடத்தப்படவுள்ளது மாநாட்டை எங்கே, எப்போது நடத்துவது என்பது குறித்து தமிழக அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

தமிழக சட்டசபையில் அண்மையில் இந்தவிடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

மதுரையில் இந்த மாநாடு ஏற்கனவே நடத்தப்பட்டுவிட்டதால் கோவை, திருச்சி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மாநாட்டை நடத்த வேண்டும் என சட்டசபை உறுப்பினர்கள் சிலர் தமிழக அரசைக் கோரியுள்ளனர்.

மாநாட்டைநடத்தும் இடம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும்—

உறுப்பினர்களது யோசனைகள் இது விடயத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தமிழக அரசு சார்பில் கல்வியமைச்சர் தெரிவித்தார்.

மாநாட்டை இந்த ஆண்டில் நடத்துவதா என்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள் மாநாட்டுக்கு அழைக்கப்படுவதால் அவர்களது வசதிகளை கருத்தில் கொண்டே மாநாட்டை நடத்தும் மாதம் தீர்மானிக்கப்படும்.

அதன் பின்னரே மாநாட்டை நடத்தும் இடம் தீர்மானிக்கப்படும் விரைவில் இதுவிடயமாக ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட உள்ளது. மாநாட்டை நடத்தும் இடம் குறித்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவே தீர்மானிப்பார்—இப்படி அமைச்சர் சபையில் மேலும் தெரிவித்தார்.

[இ-5]

# வீரப்பனின் சகாக்கள் 9 பேர் கைதாகினர்

சென்னை, ஜூலை 13

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனுக்கு வெடிப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களை வழங்கி வந்தவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட ஒன்பது பேரை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்தனர் என அறிவிக்கப்படுகிறது.

பெரியாறு வனப்பகுதியில் சந்தேக நபர்கள் நடமாடிய போது, அவர்களை விசேட அதிரடிப் பொலீஸ் படையினர் வழிமறித்தனர் என்றும்— பின்னர் அந்த நபர்கள் பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் — பொலீஸாரும் பதிலுக்குச் சுடவே அந்த நபர்கள் சரணடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களிடமிருந்து 75 கிலோ வெடிப்பொருள்கள் மற்றும் நாட்டுத் துப்பாக்கிகள் ஆகியவற்றை பொலீஸார் கைப்பற்றினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது

சந்தேக நபர்கள் வீரப்பனின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் சகாக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அரியாலை மயானத்தில்

# சடலங்கள் புதைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு

கொக்குவில், ஜூலை 13

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து சடலங்கள் கொண்டு வரப்பட்டு புதைக்கப்படுவதற்கு அரியாலை சித்துப்பாத்தி மயானப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

உரிமை கோரப்படாத சடலங்களே யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கொண்டு வரப்பட்டு இங்கு புதைக்கப்படுகின்றன.

சடலங்கள் ஆழம் இல்லாத குழிகளில் புதைக்கப்படுவதால் இப்பகுதியின் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் இங்கு புதைக்கவெனக் கொண்டு வரப்பட்ட சடலம் ஒன்று மக்களின் எதிர்ப்புக் காரணமாகத் திருப்பிக் கொண்டு செல்லப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-69]

## நம்பிக்கையில்லா பிரேரணை

# அ.தி.மு. கவின் உதவியை காங்கிரஸ் கட்சி நாடாது

## வாழப்பாடி சொல்கிறார்

சென்னை, ஜூலை 13

பிரதமர் நரசிம்மராவ் அரசு மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு அ. தி. மு. க. எம். பிக்களின் உதவியை இந்திரா காங்கிரஸ் நாடாது. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அ. தி. மு. கவுடன் மீண்டும் உறவு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இந்திரா காங்கிரஸுக்கு எழவில்லை என்றும் அவர் கூறினார்.

(த-எ)

# கூட்டுறவாளர் தின விழா; மாவட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை எதிர்வரும் 31 ஆம் திகதி நடத்தவுள்ள கூட்டுறவாளர் தின விழாவை ஒட்டி இடம்பெற்ற கோட்ட மட்டப் போட்டிகளில் தெரிவானவர்களுக்கான மாவட்டமட்ட இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறும்.

மாணவர், கூட்டுறவு அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கிடையிலான போட்டிகளில் கோட்ட மட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுத் தெரிவானவர்களுக்கான இப் போட்டிகள், வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்திலும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

(த-162)

# சாகித்தியப் பரிசு பெறும் ஐந்து தமிழ் நூல்கள்

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் எழுதிய ''பண்டைய தமிழகம்'' என்ற நூல் இவ்வாண்டு சாகித்தியப் பரிசைப் பெறும் ஐந்து தமிழ் நூல்களில் ஒன்றாகும்.

திரு. மு. சிவலிங்கத்தின் ''மலைகளின் மக்கள்'' என்ற சிறுகதை நூல், மாத்தளை சோமுவின் ''அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்'' என்ற நாவல், நாவற்குழியூர் நடராசனின் ''கவிக்கற்பரசி'' என்ற கவிதை நூல், திமிலை மகாலிங்கத்தின் ''புள்ளிப் புள்ளி மானே'' என்ற சிறுவர் நூல் ஆகியன இப்பரிசைப் பெறும் பிற நூல்களாகும்.

புலவர் நா. சிவபாதசுந்தரனாரின் ''புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி இரண்டாம் பகுதி; பண்டிதர் மு. கந்தையாவின் ''சிவஞான சித்தித் திறவுகோல்'', யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி இ.பாலசுந்தரத்தின் ''நாட்டார் இசை இயல்பும் பயன்பாடும்'' ஆகிய நூல்கள் சிறப்புப் பரிசுகளைப் பெற்றுள்ளன.

1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூல்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறும் சாகித்திய விழாவில் வழங்கப்படும்.

சாகித்தியப் பரிசுபெறும் ஒவ்வொரு நூலுக்கும் 10ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

(க)

# கூட்டுறவு பரிசோதகர் பதவி விண்ணப்ப திகதி நீடிப்பு?

கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வட கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு இதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்ட கல்வித் தகைமையில் பின்னர் திருத்தம் செய்யப்பட்டது.

இந்தத் திருத்தத்திற்கமைய பலர் விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தும் அதற்கான கால எல்லை போதாமையால் அவர்களால் விண்ணப்பிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்கும் படி யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வட கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளருக்கு விண்ணப்பித்துள்ளார். இதனையடுத்து விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் 200 கூட்டுறவு சங்கப் பரிசோதகர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-162)

# தமிழ் ஒரு மதத்திற்கு உரியதன்று சகல தமிழருக்கும் சொந்தமானது

## இலக்கிய விழாவில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 13

''தமிழை தாம் ஒரு மதத்துக்கு மாத்திரம் உரியதென்று இன்று கூறிவிடமுடியாது அது சகல தமிழர்களுக்கும் சொந்தமானது''

திருமறைக் கலாமன்றம் அண்மையில் நடத்திய இலக்கிய விழாவின் இறுதி நாள் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''வேற்றுமையில் ஒற்றுமை தான் தமிழினதும், தமிழ் இலக்கியத்தினதும் பலமாகும். இந்தப் பலத்தை நாம் உடைத்துவிடக்கூடாது. [illegible] உடைத்தால் தமிழர் என்ற ஒருமை நிற்காது'' என்றார்.

கலாநிதி எஸ் ஜே.வி. சந்திரகாந்தன், வண. நீ. மரிய சேவியர் அடிகளார், திரு ஜே. கொன்ஸ்ரன்ரைன், திரு. எஸ். அழகராசா ஆகியோரும் விழாவில் உரையாற்றினார்கள்.

கவிஞர்கள் வாகரைவாணன், சோ. பத்மநாதன், காரை. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்ட கவியரங்கும் விழாவில் இடம் பெற்றது.

விழாவின் போது பேராசிரியர் சிவத்தம்பி தமிழுக்கு ஆற்றும் சேவையைப் பாராட்டும் [illegible]

மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை இந்நிகழ்ச்சியில் பேசும்போது,

''தமிழ் ஒரு மதத்துக்குச் சொந்தமானது அல்ல. தமிழில் பல்வேறு மதங்களின் காவியங்கள் உள. பேராசிரியர் சிவத்தம்பி, கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு தமிழுக்கும் கிறிஸ்தவ சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார்'' என்று கூறினார்.

பேராசிரியர் சிவத்தம்பிக்கு மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து பலர் அவருக்கு மலர்மாலை அணிவித்து வாழ்த்துக் கூறினார்கள்.

(த-111)

## சிறுவர் நூல் நிலையம்

சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், பொழுது போக்கிற்கும் என சிறுவர் நூல் நிலையம் ஒன்று இம் மாதம் தொடக்கம் மானிப்பாய் தியாகசீலம் சிறுவர் பூங்காவில் அமைந்துள்ள மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

(த-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமேல் மாகாணசபையின்

# முதலமைச்சருக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனு

கொழும்பு, ஜூலை 13

வடமேல் மாகாணசபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதால் திரு. பெரேரா தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று அறிவிக்கும்படி கோரி இம்மனுவை ஹெரத் பண்டா அபயரத்னா தாக்கல் செய்துள்ளார்.

காமினி ஐயவிக்ரம பெரேரா வடமேல் மாகாண முதலமைச்சராக தற்சமயம் பதவி வகிக்கின்றார். (உ-எ)

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனை எப்படியும் செய்து முடிப்பார்கள். பலத்த பாதுகாப்புடன் இருந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவைக் கொலைசெய்ய முடியுமானால் நான் எம் மாத்திரம்?'' —இப்படி திருமதி சந்திரிகா குமாரணதுங்க மேலும் தெரிவித்தார்—

லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்படுவதற்கு மூன்று நாட்களு'கு முன்னர் தன்னையும் லலித் அத்துலத்முதலியையும் தீர்த்துக் கட்ட திட்டம் தீட்டப்பட்டிருந்தது குறித்த தகவல் தமக்குகிடைத்திருந்தது என்றும் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

தமது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தும் அரசாங்கம் தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கவில்லை என்று குற்றஞ் சாட்டினார்.

''எனது பாதுகாப்புத் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பேசினேன். கடிதமும் எழுதினேன். எதுவும் நடக்கவில்லை ஜனாதிபதியுடனும் பேசினேன் கடிதம் எழுதச் சொன்னார். எழுதி உள்ளேன்.—

''ஒஸி அபேகுணசேகரா மாகாணசபையில் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது அவருக்கு 15 அதிரடிப்படை வீரர்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் முதலமைச்சரான எனக்கு ஐந்து றிசர்வ் பொலிசாரின் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது''.—இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

## கவசவாகனங்கள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர்த் தளபாடங்களும், கவசவாகனங்களும் தற்போது அனுராதபுரத்தில் கவனிப்பாரற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் திரு. குணரத்ன தமது கேள்வியில் குறிப்பிட்டிருந்தார். (உ-எ)

## 'குமாரி' வந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படவில்லை என யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இக்கப்பலில் இலவச உலர் உணவு முத்திரை பாடசாலை மதிய உணவு என்பன எடுத்துவரப்படும். என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவை பொதி செய்யப்பட்டு கப்பலில் ஏற்றுவதற்குத் தயாராக அனுப்பப்படிருந்த போதிலும் கடைசி நேரத்தில் அவை கப்பலில் ஏற்றப்படவில்லைஎன்று தெரியவந்தது.

(உ-5-17-162)

# தேர்தல் நடைமுறைகளில் மூன்று மாதங்களில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 13

தற்போதைய தேர்தல் முறைகளில் மாற்றம் செய்வதற்கான முடிவுகள் அடுத்த மூன்று மாதங்களில் எடுக்கப்படும். இதுதொடர்பான தெரிவுக்குழு இயங்கத் தொடங்கிவிட்டது. பல்வேறு ஆலோசனைகள் அக்குழுவின் முன் வைக்கப்பட்டுள்ளன.

—இவ்வாறு பெருந்தோட்ட வேலைகள் அமைச்சர் எம், எல், எம்- அபுசாலி தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற ''மாகாண சபைத் தேர்தலும் முஸ்லிம்களும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. அங்கு உரையாற்றுகையில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைகளை மாற்றுவது குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. 18 பேர் கொண்ட இக்குழுவில் பத்துப் பேர் ஆளும் கட்சியினர் எட்டுப் பேர் எதிர்க்கட்சியினர்.

மூன்று மாதங்களில் இக்குழு முடிவுகளை எடுக்கவுள்ளது. பல தரப்பட்ட ஆலோசனைகள் இக்குழுவின் முன் உள்ளன.

முஸ்லிம்கள் சகல வித்தியாசங்களையும் மறந்து ஒன்றுபட்டுக் கூடி, ஆலோசனை நடத்தி இக்குழுவுக்கு ஒருமித்த யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

மாகாணசபை முறை இந்நாட்டுக்குப் பொருத்தமானதல்ல. சிங்களவர்களோ, முஸ்லிம்மளோ மாகாண சபைகளைக் கோரவில்லை. ஆனால் அவை அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [உ-3]

## மிதிவெடியில் கால் இழந்தார்

யாழ்ப்பாணம் ஜூலை 13

தோட்டம் பார்க்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு கணுக்காலுடன் இடது காலை இழந்தார். அச்சுவேலி தென்மூலையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

தென்மூலையில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசித்து வரும் வேதநாயகம் தெனாறிஸ் இறிவிடி (வயது 35) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே மிதிவெடியில் சிக்குண்டார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## மாவத்தகம பிரதேச சபையில்

# ஐ.தே.க தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## சு.க. ஆதரவுடன் நிறைவேறியது

கொழும்பு, ஜூலை 13

ஐ.தே.க. வைச் சேர்ந்த — மாவத்தகம பிரதேசசபையின் தலைவருக்கு எதிராக — சபையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து உறுப்பினர்களுடன் சேர்ந்து ஆளும் ஐ.தே.க உறுப்பினர்கள் நால்வர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததை அடுத்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது ஐ.தே.கவின் இரு உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர். ஒருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரதேசசபைத் தலைவர் ஆர். பி. திஸாநாயக்கா ஊழல் குற்றங்களைப் புரிந்ததாகத் தெரிவித்து இப்பிரேரணை கொண்டுவரப்பட்டது. (உ-6)

# நெருப்புக் காய்ச்சல் யாழ். நகரில் பரவுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தற்போது நெருப்புக் காய்ச்சல் அதிவேகமாக பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் இதுவரை 103 பேர் இப்பகுதியில் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதுடன், ஒருவர் மரணமும் அடைந்துள்ளார்.

குருநகரில் 35 பேரும், நல்லூரில் 14 பேரும், நாவாந்துறையில் 12 பேரும், கந்தர்மடத்தில் 7 பேரும், கொழும்புத்துறையில் 5 பேரும், வண்ணார்பண்ணையில் 6 பேரும் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இந்நோய் தொடர்ந்து பரவுவதை தடுப்பதற்கான வழி முறைகளை ஆராய்வதற்கானகருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 மணியளவில் யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:

இதில் பொது சுகாதார பரிசோதகர், சுத்திகரிப்பு பரிசோதகர், குடும்பநல சேவையாளர்கள் பலரும்பங்கு கொள்ளவுள்ளனர் (உ-162)

## இப்போதைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிச் செல்லப்படுவதாகவும்—

தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக பிரிகேடியர் வீரசேகர மேலும் தெரிவித்தார்.

யுத்தக் கைதிகள் புதன் கிழமை முதல் உண்ணாவிரதம் இருப்பார்கள் என்ற தகவல் தமக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் சொன்னார். (உ-6)

## பங்கீட்டு அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது பிரதேச மக்களின் நலன்கருதி உதவி அரசாங்க அதிபர்களின் அங்கீகாரத்துடன், அவ்வப் பகுதி இராமசேவை அலுவலர்கள் மூலம் புதிய பங்கீட்டு அட்டைகளை வழங்கி வருகிறது.

பிரதான குடியிருப்பாளர்கள் தமது குடும்ப அட்டையை காண்பித்து குடும்ப அங்கத்தவர்களை பதிவுசெய்து இம் மாத இறுதிக்குள் அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-162)

## உயர்தர பரீட்சை குறித்து விசேட ஒலிபரப்புச் சேவை

கொழும்பு, ஜூலை 13

ஜி.சி,ஈ. (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட ஒலிபரப்பு நிகழ்ச்சி ஒன்று நேற்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச்சேவையால் ஒலிபரப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் சிங்களத்திலும் செவ்வாய், வியாழக்கிழமைகளில் தமிழிலும் இந்த ஒலிபரப்பு இடம்பெறும்.

இந்த ஒலிபரப்பில் பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பொருளியல், தமிழ்மொழி ஆகிய பாடங்களுடன் பரீட்சார்த்திகளுக்கான தகவல்கள் அடங்கிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

எதிர்வரும் பரீட்சையில் மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிக்கும் முறை குறித்து இந்த நிகழ்ச்சியில் உரிய விளக்கங்கள் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசேட நிகழ்ச்சி சிங்கள சேவையில் பிற்பகல் 3 மணியிலிருந்து ஒலிபரப்பாகும். (உ-3)

# மட்டக்களப்பில் புதிய முகாம்கள்

மட்டக்களப்பில் இம்மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி இடம் பெயர் சேவையை ஒட்டி, நகரில் வீடுகளில் படையினரின் புதிய முகாம்களும், காவலரண்களும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கல்லியன்காடு, சாஹிரா வித்தியாலயம், மண்டூர், கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் உள்ள பல வீடுகளில் படையினர் முகாம்களை அமைத்துள்ளனர்.

இதனால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, அகதி முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். (உ-3)

## மரண அறிவித்தல்

### இராமநாதன் திருநாவுக்கரசு

(இளைப்பாறிய P.W.D ஓவசியர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமநாதன் திருநாவுக்கரசு 06-07-1993 அன்றுபுத்தளத்தில் காலமானார்.

இவர் இராமநாதன் — மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மகனும், மங்களத்தின் (இளைப்பாறிய ஆசிரியை கைதடி மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், பார்வதி, திருமகள், நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்புவின் மாமனாரும், பிரதீபன், பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 07-07-1993 அன்று புத்தளத்தில் நடைபெற்றன.

தகவல்:
சு. தம்பு
(மருமகன்)

தோப்புவளவு,
சுன்னாகம்

(5991)

## வடக்கு—கிழக்கில் தொடரும்

# யுத்தத்துக்கு முடிவு காணவே தேசிய அரசமைக்க முயற்சி

## ஜ.ஐ.தே.மு. செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 13

வடக்கு - கிழக்கில் வருடக் கணக்காகத் தொடரும் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்காகவே தேசிய அரசாங்கத்தில் சேர நாம் முடிவு செய்தோம்.

—இப்படிக் கூறினார் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா.

அம்பலாங்கொடையில் அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்

அங்கு அவர் கூறியதாவது:-

நாட்டின் எதிர்காலத்தை முன்னிட்டு இந்த தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அரசியல் பேதங்களை மறந்து, ராஜதந்திரமான முறையில் புதிய வழிகளை அணுகவேண்டிய காலம் வந்துவிட்டது

இன்று நாடு இருக்கும் நிலை தொடர்ந்தும் செல்லுமானால் வடக்கு- கிழக்கு பிரபாகரனுக்கும், மலையகத்தை தொண்டமானுக்கும் வழங்கிவிட்டு கைகட்டி நிற்கவேண்டிய நிலைதான் எமக்கும் ஏற்படும் - என்றார்.

மேல்மாகாண கடற்றொழில், சுகாதார அமைச்சர் பிரேமரத்ன குணசேகரா பேசுகையில்—

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணக்கூடிய இரு தலைவர்கள் உள்ளனர். ஒருவர் ஜே ஆர். மற்றவர் காமினி. இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியா காமினியைத்தான் ஏற்றுக்கொள்கிறது'' என்றார். (உ-3)

## இந்தியா 6 விக்கெட்டுக்கு 342 ஓட்டங்கள்

கொழும்பு, ஜூலை 13

இலங்கை கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் அணிக்கும் இந்தியஅணிக்கும் இடையேயான மூன்று நாள் போட்டி நேற்று குருணாகல வெலகெதர விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

முதல் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 6 விக்கட்டுக்கள் இழப்புக்கு 342 ஓட்டங்களை எடுத்திருந்தது,

இந்திய அணியின் கப்டன் முகமது அஸாருதீன் 100 ஓட்டங்களையும் மனோஜ் பிரபாகர் 56 ஓட்டங்களையும் எடுத்தனர், கிரான் மோரே 61 ... 44 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org